கூட்டுறவுச் சங்கம், 28-12-1994 அன்று பதிவு செய்யப்பட்டு, தற்போது செயல்பட்டு வருகிறது.

திருமதி கே. எம். கலைச்செல்வி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வினாவை நான் அப்போது வைத்தபோது, அங்கே அப்படிப்பட்ட ஒரு கூட்டுறவுச் சங்கம் அமைக்கப்படவில்லை. கோரிக்கை வைத்தவுடன், மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அரசு, கனிவோடு பரிசீலித்து, இப்போது அந்தக் கூட்டுறவுச் சங்கம் நல்லமுறையில் அமைக்கப்பட்டதோடு, சிறப்போடும் நடைபெற்று வருகிறது. அதற்காக, தொகுதிவாழ் மக்களின் சார்பாக என் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்து, அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 32, திரு. மா. சுந்தரதாஸ், மாண்புமிகு சமூகநலம் மற்றும் கைத்தறித்துறை அமைச்சர்.

32—

கூட்டுறவு நூற்பாலை நூல்களின் விற்பனை

***34154**—திரு. மா. சுந்தரதாஸ்:*

மாண்புமிகு சமூகநலம் மற்றும் கைத்தறித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இம்மாநிலத்திலுள்ள கூட்டுறவு நூற்பாலைகள், அதன் நூல்களை பம்பாய் வணிக சந்தைக்கு அனுப்புகின்றனவா?

(ஆ) இது தமிழ்நாட்டிலுள்ள துணி ஆலைகளை பாதித்துள்ளதா?

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூகநலம் மற்றும் கைத்தறித்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : சன்னரக கோன் நூல்கள் மட்டும் நம்முடைய தமிழகத்து நெசவாளர்களின் தேவைக்குமேல் இருப்பதை மட்டுமே, ஆலைகளின் நன்மை கருதி விற்கப்படுகின்றன. இதனால் தமிழ்நாட்டு நூற்பாலைகளுக்கு எந்தவிதமான பாதிப்பும் இல்லை.

1995 நவம்பர் 7]

திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆண்டுதோறும் எவ்வளவு ரூபாய்க்கு நாம் வெளி மாநிலங்களுக்கு விற்கிறோம்; விற்றதுபோக மீதி நமது மாநிலத்தின் உற்பத்திக்குப் போதுமானதாக இருக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்து நெசவாளர்களைப் பொறுத்தவரையில், 'சிட்டா' நூல்களையே அதிகமாக உபயோகப்படுத்துகிறார்கள். நம்முடைய மாநிலத்தில் 'சிட்டா' நூல் உற்பத்தி 1200 இலட்சம் கிலோவாக இருக்கிறது. அதிலே, 536 இலட்சம் கிலோ அளவுக்குத் தான் தமிழகத்திலே பயன்படுத்தப்படுகிறது. மீதி, நமது தேவைக்கு அதிகமாக இருக்கிற நேரத்தில், வெளியிலே விற்கிறோம். நம்முடைய விற்பனை என்பது, கூட்டுறவு நூற்பாலைகளின் உற்பத்தியில் 5% மட்டுமே விற்கப்படுகிறது.

திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கேள்விப் போட்டு, ஏறக்குறைய ஓராண்டு ஆகிறது. அப்போது அந்தச் சிக்கல் இருந்ததாக பத்திரிகையிலே, 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' பத்திரிகையிலேகூட எழுதியிருந்தார்கள். பொதுவாக, அதுபற்றி என்னுடைய மாவட்டத்திலே இருக்கிற மக்கள்கூட சொன்னார்கள். இப்போது அந்தப் பிரச்சினை இல்லை என்று சொன்னதற்கு இந்த அரசுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால், திரும்பவும் நீங்கள் அதிகமான அளவுக்கு விற்றால், நம்முடைய மாநிலம் பாதிக்கக்கூடாது என்பதை அரசுக்கு உணர்த்திக்கொள்ள நான் விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது நூல் உற்பத்தியில் நம்முடைய மாநிலம் உபரி மாநிலமாக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். நாம் 5 விழுக்காடுதான் விற்கிறோம். தேசிய நூற்பாலைக் கழகம் 70% அளவுக்கு விற்றுக் கொண்டிருக்கிறார்கள். நம்முடைய தேவைக்குமேல் இருப்பதை நாம் விற்றால்தான், நம்முடைய நூற்பாலைகளை இலாபகரமாக இயக்குவதற்கு அது உபயோககரமாக இருக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 33, திரு. ஏ. கே. சி. சுந்தரவேல், மாண்புமிகு சமூகநலம் மற்றும் கைத்தறித்துறை அமைச்சர்.